**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.296/2018**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 13.03.2026 | | |
|---|---|---|---|
| பெயர்: | பிரகாசம் (PW2- Cross ) | தகப்பனார் பெயர்: | நாகரத்தினம் |
| கிராமம்: | கோடங்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 68/2026 |

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :13.03.2026</u>**
**(ஆரம்பித்த நேரம்–12.37)**

1. நான் நெம்மேலி வட்டம் கோடங்குடியில் வசித்து வருகிறேன். தாவா சொத்து ஓலையாம்புத்தூர் வட்டத்தில் உள்ளது. நெம்மேலிக்கும், ஓலையாம்புத்தூருக்கும் இடையே சுமார் 6 கி.மீ இருக்கும். இந்த வழக்கை வாதி அபிபுல்லா தாக்கல் செய்துள்ளார். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் சொத்தை வேறு ஒரு நபருக்கு மாற்றி பதிவு செய்துள்ளார்கள் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாருக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது.

2. வாதி யார் மீது வழக்கிட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வாதிக்கு சொந்தமான சொத்து என்பது 40 குழி ஆகும். வாதி யாரிடமிருந்து, எப்போது தாவா சொத்தை கிரயம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது. கிரயத்தொகை விபரமும் எனக்கு தெரியாது. வாதியின் தாவா சொத்தில் நெடுஞ்சாலைத்துறைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. வாதி தாவா சொத்தைப்பொறுத்தோ அல்லது வேறு சொத்துக்களை பொறுத்தோ நஷ்டஈடு நெடுஞ்சாலைத்துறையிலிருந்து பெற்றுள்ளாரா என்றால் இல்லை.

3. வாதி வாங்கிய சொத்தின் புல எண்ணுக்கான திட்ட விஸ்தீரணம் எனக்கு தெரியாது. ஹனிப் என்பவருக்கு எவ்வளவு நிலங்கள் சொந்தமாக

இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. ஹனிப் குடும்பத்தினரின் நிலங்கள் சுமார் 8 வருடங்களுக்கு முன்பே விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஹனிப்பின் நிலம் ஒலையாம்புத்தூர் ரோட்டில் மெரிடியன் பேப்பர் மில் அருகில் இருந்தது என்றால் சரிதான். ஹனிப்பின் நிலத்திற்கும், புறவழிச்சாலைக்கும் சுமார் ஒன்றரை கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

4. ஹனிப்பின் நிலத்தில் நான் கோரை வளர்த்ததாக வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. கோரை சாகுபடி செய்ததற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். ஹனிப் அரசூர் ஊராட்சி மன்றத்தலைவராக இருந்தார் என்றாலும், சுமார் 8 வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டார் என்றாலும் சரிதான். இந்த வழக்கில் வாதி, பிரதிவாதி ஆவணங்கள் ஏதும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தில் என்ன உரிமை உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. வாதி தாக்கல் செய்த வழக்கு பொய்யானது என்றாலும், அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி எனக்கு சுமார் 30 ஆண்டுகளாக பழக்கம். நட்பு அடிப்படையில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கோரை சாகுபடி செய்ததற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். வாதியின் தாவா சொத்தில் நெடுஞ்சாலைத்துறைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. வாதி தாவா சொத்தைப்பொறுத்தோ அல்லது வேறு சொத்துக்களை பொறுத்தோ நஷ்டஈடு நெடுஞ்சாலைத் துறையிலிருந்து பெற்றுள்ளாரா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.59)**